# 33

## பொழுதுபோக்கு

குரல் 1 காலத்தைப் படைத்தவன் அல்லாஹ். அதனை இயக்குபவனும் அவனே. காலம் அல்லாஹ் நமக்களித்த மாபெரும் அருட்கொடை. காலம் விலை மதிக்க முடியாதது. இழந்த காலத்தைத் திரும்பப் பெற முடியாது. மனிதனது வாழ்நாள் வரையறுக்கப்பட்டுள்ளது. நாம் நாளாந்தம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன.

குரல் 2 அல்லாஹ் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த 'அல்-அஸ்ர்' (காலம்) என்ற பெயரில் ஒரு சிறு ஸூறாவையே இறக்கி வைத்துள்ளான். ''காலத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக மனிதன் நஷ்டத்திலுள்ளான். விசுவாசம் கொண்டு நற்கிரியை புரிந்து பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சத்தியத்தைக் கொண்டும் பரஸ்பரம் ஒருவருக் கொருவர் பொறுமையைக் கொண்டும் உபதேசித்துக் கொண்டோரைத் தவிர''.

குரல் 3 ''இரு பெரும் அருட்கொடைகள் உள்ளன. அதில் அதிகமான மனிதர்கள் நஷ்டமடைகின்றனர். அவை ஆரோக்கியமும் ஓய்வும் ஆகும்'' என நபி ﷺ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (புஹாரி, முஸ்லிம்).

குரல் 1 எமக்கு ஓய்வாகக் கிடைக்கும் காலங்களைப் பயனுள்ள பொழுதுபோக்குகளில் கழிக்க முற்பட வேண்டும். உழைப்பால் சோர்வடைந்த உடலையும் உள்ளத்தையும் உற்சாகப்படுத்துவதற்காக ஓய்வு நேரத்தைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.

குரல் 2 பயனுள்ள பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதை இஸ்லாம் வரவேற்கிறது. முஹம்மத் ﷺ அவர்கள் பொழுதுபோக்காக மல்யுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். ருகானா எனும் மல்யுத்த வீரனுடன் போட்டியிட்டு அவரை வெற்றி கொண்டுள்ளார்கள்.

குரல் 3 ''நீங்கள் அம்பெறிந்து பழகுங்கள். குதிரைச் சவாரி செய்யுங்கள்'' (முஸ்லிம்) என உடல் வலிமையை வளர்க்கும் வீரதீரச் செயல்களில் ஈடுபட அவர்கள் எம்மை உற்சாகப்படுத்தியுள்ளார்கள்.

குரல் 1 'பலசாலியான ஒரு முஃமின், பலவீனமான முஃமினை விட சிறந்தவனும் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமுடையவனுமாவான்' (முஸ்லிம்).

குரல் 2 ‘‘அடிக்கடி நீங்கள், உங்களுக்கு ஓய்வைக் கொடுங்கள். ஏனெனில் சோர்வடைந்த உள்ளம் சலிப்படைந்து விடும்’’ என அலி (ரழி) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

குரல் 3 இவ்வாறான பொழுதுபோக்குகளுக்கு நவீன உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை நல்ல வழிகளில் பயன்படுத்தினால் மட்டுமே நன்மை பெறலாம். தீய வழிகளில் பயன்படுத்தினால் தீங்குதான் ஏற்படும். எனவே நல்ல பயன்களைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரமே நாம் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

குரல் 1 ‘‘மனிதர்களில் சிலர் இருக்கின்றனர். அவர்கள் வீண் கேளிக்கைகளை விலைக்கு வாங்கி அல்லாஹ்வுடைய வழியிலிருந்து அறிவின்றி மக்களை வழிகெடுத்து அதனை (அல்லாஹ்வின் வழியை) பரிகாசமாகவும் எடுத்துக் கொள்கின்றனர். இத்தகையோருக்கு இழிவு தரும் வேதனை நிச்சயமாக உண்டு’’ (31:06) என்ற அல்குர்ஆன் வசனம் எமது பொழுதுபோக்குச் சாதனங்கள் வீண் கேளிக்கைகளாகவோ அல்லாஹ் வுடைய வழியிலிருந்து எம்மை வழிகெடுத்து விடக் கூடியவைகளாகவோ அமையக் கூடாது என அறிவுறுத்துகின்றது.



குரல் 2 இன்று வானொலி, தொலைக்காட்சி போன்றன மூலம் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் நடைபெறும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கின்றது. அதன் மூலம் அறிவுசார் நிகழ்ச்சிகளையும் இஸ்லாமிய சமய நிகழ்ச்சிகளை யும் கேட்டுப் பயன் பெற முடிகிறது. அதேபோல் ஒலிநாடாக்கள், இறுவட்டுக்கள் ஊடாக குர்ஆன் அழகுற ஓதப்படுவதைச் செவிமடுப்பதோடு அதன் விளக்கங் களையும் அறிந்து நன்மை தேடிக் கொள்ள முடிகிறது. பயன்மிகு பேச்சுக்களைக் கேட்டு பயன்பெற முடிகிறது.

குரல் 3 அதிசக்தி மிக்க தொடர்பு சாதனமான தொலைக்காட்சி இன்று ஒரு பொழுதுபோக்கு சாதனமாக மாறியுள்ளது. நிகழ்ச்சிகள் ஒலி-ஒளி வடிவில் இடம்பெறுவதால் அதிகூடிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதன் ஊடாக செய்திகளை மட்டுமன்றி பல கல்வி நிகழ்ச்சிகளையும் சமய போதனைகளையும் அல்லாஹ்வின் விந்தை மிகு படைப்புக்கள் பற்றிய விபரங்களையும் எங்களால் பார்த்தும் கேட்டும் அறிய முடிகிறது. இது இஸ்லாமிய த∴வாப் பணிக்கும் பயன்பட்டு வருகிறது.

குரல் 1 மேலும் கணினி, இணையம் என்பன கல்வியுலகுக்கும் தகவல் பரிமாற்றத்துக்கும் அளப்பரிய சேவைகளைச் செய்து வருகின்றன. உலகின் மூலை முடுக்குகளிலுள்ள கல்விக் கூடங்களோடும், பல்கலைக்கழகங்களோடும் நூலகங்களோடும் அறிவுசார்

தகவல்களை உடனுக்குடன் பரிமாற்றிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் அவற்றைப் பிழையான வழிகளில் பயன்படுத்துவோரும் உள்ளனர்.

குரல் 2 இளைய தலைமுறையினரிடையே அதிக இடம் பிடித்துள்ள தொலைத் தொடர்பு சாதனமாகக் கையடக்கத் தொலைபேசியைக் குறிப் பிடலாம். துரித தகவல் பரிமாற்றத்துக்குப் பேருதவியாக விளங்கும் இது, தற்போது தொலைபேசி என்ற நிலையைத் தாண்டி தொல்லைபேசியாக மாறி வருகிறது.



குரல் 3 பயன்தரு அறிவுசார் நூல்கள் நல்ல நண்பர்களாவர். பாடசாலையிலும், எமதுாரிலுமுள்ள நூல் நிலையங்களைப் பயன்படுத்தி நாம் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்து கொள்ளலாம். அதன் மூலம் நாளுக்கு நாள் எமது அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்.

குரல் 1 கையெழுத்துப் பத்திரிகை, சுவர்ப் பத்திரிகை, சிறுகதை, கவிதை, கட்டுரை என பயனுள்ள, எழுத்தாக்கங்களை எழுதுவதிலும் படங்களை வரைவதிலும் எமது பொழுதைக் கழிக்க வழியுண்டு.

குரல் 2 பொழுதைப் பயனுள்ள வழியில் கழிக்க உதவும் மற்றொரு அம்சம் சுற்றுலாக்கள் செல்வது ஆகும். பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் படைப்புக்களைப் பார்த்துப் படிப்பினை பெறத் தூண்டும் பல வசனங்கள் குர்ஆனில் உள்ளன. உடல் உள களைப்பைப் போக்கி மன மகிழ்ச்சியைத் தரும் சுற்றுலாக்கள் நன்மையைத் தேடித் தரவல்லன.

குரல் 3 இதனால் பாடசாலைகளில் கற்றலில் ஈடுபட்டு களைப்படையும் எமது உள்ளங்களை மகிழ்விக்க பயன்மிகு கல்விச் சுற்றுலாக்களில் எம்மை ஈடுபடுத்தி எமது பொழுதை கழிக்க வழிகாட்டப்படுகின்றது.



குரல் 1 இஸ்லாம் எடுத்துக் கூறும் மற்றொரு பொழுதுபோக்கு மரம் நடுதல் ஆகும். சூழல் மாசடைவதைத் தடுக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும் இப்பொழுதுபோக்கு உதவுகிறது.

குரல் 2 முஹம்மத் ﷺ அவர்கள் ‘‘கியாமத் நாள் ஏற்பட்ட நிலையில், உங்கள் ஒருவரது கரங்களில் மரக் கிளையொன்றிருந்து, அது சம்பவிப்பதற்குள் அதனை நட முடியுமாயின் நடுக. அதற்கும் உமக்கு நற்கூலி உண்டு’’ (உம்ததுல் காரி) எனக் கூறியுள்ளார்கள். மேலும் எமது சுற்றாடல் அழகாகவும் பசுமையாகவும் காட்சியளிக்க வகை வகையான பூ மரங்களை நாட்டிக் கொள்ளலாம். வாரத்துக்கு ஒருமுறை யாவது எமது வீடு, மற்றும் வீட்டை அண்டிய பகுதிகளைச் சுத்தப்படுத்துவதும் தோட்ட வேலை செய்வதும் சிறந்த பொழுதுபோக்குகளேயாகும்.

குரல் 3 எமது ஓய்வு நேரங்களை பயனுள்ள வழியில் பயன்படுத்துவோம். உடலுக்கும் உள்ளத்துக்கும் மகிழ்ச்சி தரும் வகையில் நவீன தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவோம்.

பயிற்சி:

1. நவீன தொடர்பு சாதனங்களால் நாம் அடையக் கூடிய பயன்களைப் பட்டியற்படுத்துக.
2. நவீன தொடர்பு சாதனங்களால் இன்று சமூகத்தில் ஏற்பட்டு வரும் தீய விளைவுகளைக் குறிப்பிடுக.

செயற்பாடு:

1. எமது பொழுதுபோக்குகளை எவ்வாறு நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது பற்றி பாடசாலை இலக்கிய மன்றத்தில் பேசுவதற்காக அல்லது இஸ்லாமிய தின விழாவில் பேசுவதற்காக ஓர் உரை தயாரிக்குக.